**E.A. No.6/2025 in EP. No. 66/2024**

**ம.சா.1 : நல்லம்மாள்**

**தேதி : 13.11.2025**

**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

ம.சா.ஆ.2 ஆவணத்தை பற்றி எனக்கு தெரியும். மேற்சொன்ன ம.சா.ஆ.2 வழக்கை என் கணவர் தான் தாக்கல் செய்தார். எனக்கும் என் கணவருக்கும் முருகேசன், பாஸ்கர் என்ற இரு மகன்கள் உள்ளார்கள். எனக்கு திருமணம் ஆகி 40 வருடங்கள் ஆகிறது. என் கணவர் என் உறவுக்காரர் அல்ல. என் மாமனார் பெயர் வீரப்ப கவுண்டர். என் மாமனார் உடன் பிறந்தவர்களில் மூத்த சகோதரர் பெயர் பழனியப்ப கவுண்டர், இ ளைய சகோதரர் பெயர் சின்னப்பகவுண்டர், அவர்களது சகோதரி பெயர் செய்யம்மாள். மேற்சொன்ன பழனியப்பகவுண்டருக்கு கோபால் மற்றும் வாங்கலாயி ஆகியோர்கள் குழந்தைகள் என்றால் சரிதான். அந்த கோபலின் மனைவி அன்னபூரணி. அன்னபூரணி கோபாலின் வாரிசு தான் பழனிச்சாமி. மேற்சொன்ன வாங்கலாயி காலமாகிவிட்டார். அவரது குழந்தைகள் தான் சிவசாமி மற்றும் விஸ்வநாதன். சின்னப்பகவுண்டருக்கு பெரியம்மாள் என்ற ஒரு மகளும், சாமியப்பன் என்ற ஒரு மகனும் உள்ளார்கள். பெரியம்மாளின் வாரிசுதான் மனோகரன் மற்றும் ராஜரத்தினம் ஆவார்கள். சாமியப்பனின் மகன்கள் தான் பாலசுப்பிரமணி மற்றும் சரவணன் ஆகியோர்கள் ஆவார்கள். மேற்சொன்ன உறவுமுறைகளை கூறித்தான் ம.சா.ஆ.2 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். செய்யம்மாளுக்கு திருமணம் ஆகிவிட்டது. அவர் கணவரும் செய்யம்மாளும் இறந்துவிட்டார்கள். அவர்களுக்கு நேரடி வாரிசுகள் கிடையாது. ம.சா.ஆ.2 வழக்கு 27.06.2024 அன்று தள்ளுபடி ஆகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள்

மேற்சொன்ன வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது தெரிந்துகொண்டே நிறைவேற்று மனுவை காலதாமதம் செய்வதற்காகவே மேற்சொன்ன வழக்கு தள்ளுபடி ஆகவில்லை என்று பொய்யாக கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 வழக்கில் உங்கள் கணவர் தாவா சொத்துக்கள் பூர்வீகசொத்துக்கள் என்பதை நிருபிக்க இனாம் பேர் ரிஜிஸ்டர், ரீசெட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் ஆகியவற்றை அந்த வழக்கிலும், இம்மனுவிலும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 15.07.1961 ல் முத்துக்கவுண்டர் உங்கள் மாமனார் வீரப்பகவுண்டருக்கும் மனைவி மருதாயிக்கும் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். 15.07.1961 அன்றே முத்துக்கவுண்டர் அவரது மூத்த மகன் பழனியப்பகவுண்டருக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். 10.08.1956 ல் முத்துக்கவுண்டர் சின்னப்பகவுண்டருக்கு ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். 15.07.1961 அன்று முத்துக்கவுண்டர் தனது மகளான செய்யம்மாளுக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணங்களை நீங்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன 4 செட்டில்மெண்ட் ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் உங்கள் மனு தள்ளுபடி ஆகிவிடும் என்பதால் மேற்சொன்ன 4 ஆவணங்களையும் இம்மனுவில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 26.05.1917, 14.05.1923 ஆகிய தேதிகளில் முத்துக்கவுண்டர் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். 6ம் எதிர்மனுதாரர் முருகேசனுக்கு வாரிசின் படி மனுச்சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. உங்கள்

கணவர் நீதிமன்றத்திற்கு வந்தால் இந்த உண்மை தெரிந்துவிடும் என்பதால் நீங்கள் அவரை இந்த மனுவில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் அவரால் வாய்பேச முடியாது, காது கேட்காது, ஒரு கண் தெரியாது. மேற்சொன்ன குறைபாடுகள் உங்கள் கணவருக்கு இருப்பதை கூறி நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அனுமதி வாங்கியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் 3ம் வகுப்பு வரை படித்துள்ளார். என் கணவர் ஆங்கிலம் படிக்க தெரியாது. ம.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சரத்துக்கள் என் கணவருக்கு நேரடியாக தெரியாது. செய்யம்மாள் இறந்த பிறகு செய்யம்மாளின் சொத்துக்கள் வாரிசு படி அவரது சகோதரர்களுக்கு வந்துவிடும் என்று சொன்னால் சரியல்ல. நிறைவேற்று மனுவில் சொல்லியுள்ள சொத்துக்களில் உங்கள் மகன் முருகேசனுக்கு பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. உங்கள் மகனுக்கு மனுச்சொத்தில் 1/4 பங்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. என் மகன் முருகேசன் என்ன வேலை செய்கிறார் என்பது எனக்கு தெரியாது. உங்கள் முருகேசனும் நீங்களும் நல்ல உறவுமுறையில் தான் இருக்கிறீர்கள் என்றும் அவருடன் போக்குவரத்து உள்ளது என்றும் அதனை மறைத்து நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதி மோகன்ராஜ் உங்கள் மகனுக்கு எதிராக நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று உங்கள் மகன் முருகேசன் சொத்தை ஜப்தி செய்த பிறகு உங்கள் மகன் முருகேசன் தூண்டுதலின் பெயரில் நீங்கள் இந்த மனுவை பொய்யாக தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 26.05.1917 மற்றும் 14.05.1923 ஆகிய தேதிகளில் வாங்கிய சொத்துக்களை தவிர வேறு பூர்வீக சொத்துக்கள் உள்ளது. உங்கள் மகன் முருகேசனுக்க மேற்சொன்ன முத்துக்கவுண்டரின் வழியாக வந்த

சொத்துக்களில் பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த மனுவிற்கு பின்னால் இருந்து உங்களையும், உங்கள் கணவரையும் உங்கள் மகன் முருகேசன்தான் இயக்கி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. மோகன்ராஜின் வாரிசுகள் சட்டப்படி கிடைக்கப்பெற்ற தொகையினை அனுபவிக்க கூடாது என்பதால் நீங்கள் இந்த மனுவை கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றும் உங்கள் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. மனு தாக்கல் செய்வதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே சொத்துக்கள் ஜப்தி ஆன விவரம் தெரியும். மனு சொத்து குறித்து வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.